**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 489/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கத்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லப்பாண்டி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | பிள்ளைகுளம் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 24.03.2026.

**(1வது எதிரி சிறையிலிருந்து காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கடையம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 29.05.2024ம் தேதி ஆலங்குளம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, இரவு ரோந்து அலுவலாக நானும், தலைமைக்காவலர் ஜான்சன் என்பவரும் சென்றிருந்தோம். 30.05.2024ம் தேதி, அதிகாலை 00.05 மணியளவில் ஆலங்குளம் பஸ்நிலையத்திற்கு எதிரேயுள்ள தவசி ஹோட்டலின் முன்பு இருசக்கரவாகனத்தில் வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட சிவலார்குளம் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த முத்தையா மகன் கல்யாணசுந்தரம், சிவலார்குளம் அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த சங்கரபாண்டியன் மகன் நிர்மல் இருவரும் எங்களுக்கு அருகில் வந்து இருசக்கரவாகனத்தை நிறுத்தி விட்டு பொதுஇடத்தில் வைத்து போலீஸ்கார தேவடியா மகன்களா என்று அசிங்கமாக பேசி, எங்க

தம்பிகளை பிடித்து கஞ்சா கேஸ் போட்டு, கஞ்சா வித்து கையில் வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே அடைத்து பெரிய மயிரு மாதிரி இங்கே நிக்கிறீர்களா? என்று கேட்டார். பின்னர் நிர்மலை கூப்பிட்டு 1ம் எதிரி இவங்களை வெட்டிக்கொல்லு, உயிரோடு விடக்கூடாது என்று சொல்லவும், 2ம் எதிரி நிர்மல் அவரது சட்டையின் பின்புறம் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து என்னை நோக்கி தேவடியா மவனே, இத்தோடு செத்து ஒழி என்று சொல்லி, எனது கழுத்தை பார்த்து வெட்ட வந்தார். நான் சுதாரித்து கொண்டபோது, அந்த வெட்டு என் தலையின் பின்புறம் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. நிர்மல் வெட்டும் போது நான் தலையை திருப்பவில்லை என்றால் அந்த வெட்டானது என்னுடைய கழுத்தில் பட்டு தலை துண்டாகியிருக்கும். எதிரிகள் என்னுடைய அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள்.

நிர்மலிடமிருந்த அரிவாளை கல்யாணசுந்தரம் வாங்கிக்கொண்டு தலைமைக்காவலர் ஜான்சன் என்பவரை பார்த்து தாயோலி இத்தோடு நீயும் செத்து ஒழி என்று கூறி வெட்டுவதற்கு விரட்டினார். தலைமைக்காவலர் ஜான்சன் கிழக்கு பார்த்து ஓடி விட்டார். கல்யாண சுந்தரம் அரிவாளை வைத்து தலைமைக்காவலர் ஜான்சனின் பைக்கான TN-72-BR-9563 ஹீரோ கிளாமர் பைக்கின் மாஸ்க்கையும், இடது கைப்பிடியையும் வெட்டினார். ரூ.1000/-மதிப்பில் சேதாரம் ஏற்பட்டது. அருகில் நின்றவர்கள் எதிரிகளை பிடிக்க செல்லவும், கல்யபாண சுந்தரம் அரிவாளுடன் எங்களை யாராவது பிடிக்க வந்தீர்கள் என்றால் உங்களை வெட்டிக்கொன்று விடுவேன் என்று சொல்லி வெட்ட விரட்டவும், அங்கிருந்தவர்கள் பயந்து நாலாபுறமும் ஓடிவிட்டார்கள். தவசி ஹோட்டலில் வேலை பார்த்தவர்கள் தவசி ேஹாட்டலை பயந்து அடைத்து

உள்ளே இருந்தார்கள். நான் தவசி ேஹாட்டல் வழியாக வெளியே ஓடி விட்டேன். எதிரிகளும் பைக்கை எடுத்துக்கொண்டு சென்றார்கள். பின்னர் தகவல் தெரிந்து ஆலங்குளம் காவல்துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இரவுப்பணியில் இருந்த முதல்நிலைக்காவலர் ராஜா தனஜெயன் என்பவர் சம்பவயிடத்திற்கு வந்து ஜான்சன் ஏட்டையாவுடன் என்னை ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். பின்னர் நான் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் வைத்து தான் எதிரி நிர்மல்குமார் என்னை வெட்டினார். அந்த அரிவாள் அ.சா.பொ.1 ஆகும். ஆய்வாளர் இது குறித்து என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.25 13:23:57 +0530